பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 13 (29—9—72) வெள்ளி — வெளியூர்: புரட்டாசி 14 (30—9—72) சனி [இதழ்: 89

சுற்றுலா இடமாக மேட்டூர் அணை

சேலம், செப். 29—

"மேட்டூர் அணைப் பகுதியை ஒரு சுற்றுலா இடமாக்கத் தமிழக அரசு ரூ. 11 இலட்சம் செலவிலான ஒரு திட்டம் தயாரித்திருக்கிறது"

என்று அமைச்சர் கே. இராசாராம் அவர்கள் இங்கு கூறினார்.

இங்கு ரூ. 3 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஒரு பயணிகள் விடுதியைக் கல்வி யமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் திறந்து வைத்தார்.

இலட்சியம்தான் நமக்குத் தெரிய வேண்டும்

அன்று அறிஞர் அண்ணா சொன்னதை நினைவில் கொள்ளுவீர்

கழகத் தோழர்கட்குக் கலைஞர் விடுக்கும் வேண்டுகோள்

சென்னை, செப். 29—

"ஓர் இலட்சியத்தில்--குறிக்கோளில் எதை அடைய நினைக்கிறோமோ அதுதான் தெரிய வேண்டுமேயல்லாமல், மரமும்--இலையும்--தழையும் தெரிந்துகொண்டிருந்தால் இலட்சியத்தை அடைய முடியாது' என்று அண்ணா அவர்கள், அன்றையத் தினம் அனைவருக்கும் அறிவுறுத்தினார், இந்த நேரத்திற்கு அது பொருந்தும் என்கின்ற காரணத்தால், அதனை நான் நினைவுபடுத்திக்கொள்கிறேன்"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், நேற்று மூர் அங்காடியில் அண்ணா உருவச் சிலையைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெள்ளத் தெளிவுற விளக்கிக் குறிப்பிட்டார்; இத்தொடர்பில், தொடர்ந்து அவர் கூறியதாவது:—

"கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையிலேகூட, அது கட்சியின் கட்டுப்பாடாக இருந்தாலும் — தமிழ்ச் சமுதாயத்தின் கட்டுப்பாடாக இருந்தாலும் — அண்ணா அவர்கள் அனைத்தையும் வேதனையோடு தாங்கிக்கொள்கின்ற சூழ்நிலையிலே இருந்தாலும் — அதிலே மற்றவர்கள் ஈடுபட்டு, இயக்கத்திலோ -- சமுதாயத்திலோ கட்டுப்பாடு குலையாமல் பாதுகாப்பதிலே மிகுந்த கண்காணிப்போடு இருந்தார்கள்!

"இயக்கத்தின் முன்னணியிலே இடம் பெற்றிருந்த சிலர், கட்சியிலே பெரிய கீறலை ஏற்படுத்தி வெளியேறிய நேரத்திலேகூட அண்ணா அவர்கள் எவ்வளவு பவ்யமாக நடந்துகொண்டார்கள்— விட்டுக் கொடுத்துச் சென்றார்கள் என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள்!

அண்ணா அவர்களை விட்டுப் பல நண்பர்கள் 1961-ம் ஆண்டிலே பிரிந்து போகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது; அப்பொழுது அண்ணா அவர்கள், கடைசி வரையிலே எந்த அளவுக்கு வேண்டிவேண்டி -- 'நான் விட்டுக் கொடுக்கிறேன்' என்கின்ற அளவுக்குத் தன்னைத் தாழ்த்திக்கொண்டு நாம் விட்டுக் கொடுத்தால்தான் இயக்கம் வாழும்' என்பதற்காக விட்டுக் கொடுக்கும் சுபாவத்திற்கு எடுத்துக்காட்டாக அன்றைக்கு விளங்கினார்கள் என்பதை இன்றைக்கு நினைவுபடுத்திக் கொள்வது மிக அவசியமாகும்.

தமிழ்ச் சமுதாயத்தினுடைய கடமை — கண்ணியம் — கட்டுப்பாடு — இவைகள் அனைத்துக்கும் வழிகாட்டியாக — தலைவராக— தலைமகனாக— நம்மையெல்லாம் ஆளாக்கிய அண்ணனாக— தந்தையாக -- தாயாக -- நமக்கு அருமைச் சகோதரராக -- உடன்பிறப்பாக-- மறைந்தாலும் மறையாமல் நம் உள்ளமெல்லாம் நிறைந்து ஊனோடு கலந்து -- இரத்த அணுக்களிலே உயிர் சக்தியாக சுழன்று கொண்டிருப்பவர்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள்!

அண்மையில் நெல்லையில் நான் அண்ணன் சிலையைத் திறந்த போது ஒன்றைச் சொன்னேன் — 'தூங்கிக்கொண்டிருந்த சமுதாயத்தை எழுப்பத் தன் கண்ணைத் திறந்தவர் -- ஏங்கிக்கொண்டிருந்த ஏழை மக்களின் குரலைக் கேட்கத் தன் காதைத் திறந்தவர்; தமிழ்ச் சமுதாயத்தின் இனமுழக்கம் செய்யத் தன் வாயைத் திறந்தவர்; என்னைப்போன்ற தம்பிமார்களுக்கெல்லாம் இடம் தர தன் இதயத்தைத் திறந்தவர் என்று; அதனை மீண்டும் நினைவுபடுத்தி அவரது சிலையைத் திறந்துவைக்கிறேன்."

மூர் அங்காடி வியாபாரிகள் பொது நல மன்றத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா -- அண்ணா சிலை திறப்பு விழா, முன்னாள் மேயர் சா. கணேசன் தலைமையில் நடைபெற்றது.

விழாவில், சென்னை மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் அ. செல்வராசு, திராவிடமணி, சுலைமான் எம்.சி., தி. சு. நல்லதம்பி எம்.சி., சொ. கி. மூர்த்தி எம்.சி., அரங்கண்ணல் எம்.எல்.ஏ., திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ., திருப்பத்தூர் இராமமூர்த்தி ஆகியோர் பேசினர்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

அண்ணா அவர்களை அறிந்தவர்கள்--அவரோடு பழகியவர்கள் -- அவருக்குத் தம்பிகளாக -- இருக்கக்கூடிய பாக்கியத்தைப் பெற்றவர்கள் -- அவரிட்ட கட்டளையைத் தலைமேல் சுமந்து அதை நிறைவேற்றுகின்ற இடத்தில் இருந்தவர்கள் -- இன்று இலட்சக் -- கணக்கில் தமிழகத்தில் இருக்கிறார்கள்.

ஆனாலும், அண்ணா அவர்கள் எந்தக் கொள்கைகளுக்காக வாழ்ந்தாரோ -- எந்த மக்களுடைய மேன்மைக்காக மாடுபட்டாரோ -- அல்லும் பகலும் அயராமல் உழைத்தாரோ -- அந்த மக்களை வாழவைக்க எடுத்துக்கொள்ளும் முயற்சியில் தான் அண்ணா அவர்கள் நின்று புன்னகை புரிகிறார்கள் -- அந்த இடத்திலே இருந்துகொண்டு நம்மையெல்லாம வாழ்த்துகிறார்கள் -- என்பதை நாங்கள் உணர்ந்துகொண்டு தான் செயல்பட்டுக் கொண்டு வருகிறோம்,

அண்ணா அவர்கள் பெருந்தன்மையின் இருப்பிடமாகத்திகழ்ந்தார்கள்; எப்பொழுதும் தம் மீது வீசப்படுகின்ற கணைகளை -- ஏச்சுக்களை -- பேச்சுக்களை அலட்சியப்படுத்துகின்ற தன்மையும், அதற்கு வேறு வடிவம் கொடுத்து அதைத் தாங்கிக் கொள்கின்ற பக்குவமும் அண்ணா அவர்களுக்கு உண்டு; அந்தப் பயிற்சியை எங்களுக்கெல்லாம் அவர் கற்றுத் தந்திருக்கிறார்!

பெருந்தன்மையும், எவ்வளவு இழிமொழிகள் -- பழிச் சொற்கள் வீசப்பட்டாலும் அதைத் தாங்கிக்கொள்கிற திடகாத்திரமான இதயமும் அண்ணா அவர்கட்குச் சொந்தமாகும்; அப்படிப்பட்டவருக்குத்தான் இன்று தமிழ்த் தரணி முழுவதும் சிலைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்!

சிலைகளை எடுத்து அண்ணாவின் புகழ் பாடுகின்ற அதே நேரத்தில், அண்ணன் இந்த நாட்டிற்காக என்னென்ன பணிகளைச் செய்தார் -- எப்படியெல்லாம் இந்த இயக்கத்தைக் கட்டிக்காத்தார் என்பதையெல்லாம் நாம் நினைவு கூர வேண்டும்.

இந்த இயக்கத்திற்காக மட்டுமல்ல--பொதுவாகவே தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர் தந்த மூன்று சொல் அமுதங்கள் கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாடு; இவற்றை, தாமே அவர் எப்படிச் செயல்படுத்திக் காட்டினார் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்."

சட்ட அமைச்சர் பதவி விலகல் -- ஏற்க பூட்டோ மறுப்பு

இராவல்பிண்டி, செப். 29—

பாகிஸ்தான் அமைச்சரவையில் முக்கியமானவரான சட்ட அமைச்சர் முகமது அலி கசூரியின் பதவி விலகுதலை ஏற்க அதிபர் பூட்டோ மறுத்துவிட்டார் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்தது.

இராஜினாமா செய்வதற்கு சட்ட அமைச்சர் அனுமதி கோரியதாகவும், ஆனால் அனுமதி மறுக்கப்பட்டதாகவும அறிக்கை கூறியது. இரரஜினாமா செய்ததாகப் பத்திரிகைகளில் வெளியான இதர அமைச்சர்கள் பற்றி அறிக்கை எதுவும் கூறவில்லை.

சி. சுப்பிரமணியத்தின் சில்லுண்டித்தனம்

தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் இந்திக்கு வக்காலத்து

ரூர்க்கி, செப். 29—

"எல்லா மாநிலங்களும் மும்மொழித் திட்டத்தை ஏற்க வேண்டும்"

என்று மத்தியத் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் சி. சுப்பிரமணியம் கூறினார்.

ரூர்க்கி தமிழ்ச் சங்கத்தில் அவர் பேசுகையில், 'மக்கள், மாநில--தேசிய--சர்வதேச விவகாரங்களில் திறமை பெற மும்மொழித் திட்டம் தான் உதவும்' என்றார்; அவர் மேலும் சொன்னதாவது:—

"ஒருவருக்கு மத்திய அரசுப் பணிகளில் அக்கறையில்லையென்றால், அவர் இந்தி கற்க வேண்டியதில்லை; ஆனால், நாட்டின் சில பகுதிகளில் செய்யப்படுவதுபோல் மற்ற மொழிகள் மீது உண்டாக்குவது உண்மையிலேயே தீங்கானது."

வங்கதேசத்தில் களையெடுப்பு

15 உயர் அதிகாரிகட்கு சீட்டு கிழிந்தது

டாக்கா, செப். 29—

வங்க தேசத்தில் அரசு நிர்வாகத்தைத் தூய்மைப்படுத்த கடந்த ஒரு வாரமாக எடுத்து வரும் நடவடிக்கையைத் தொடர்ந்து சுமார் 15 உயர் அதிகாரிகள் 'சஸ்பெண்டு' செய்யப்பட்டுள்ளனர்.

டாக்கா குடிநீர் -- வடிகால் வாரியத் தலைவர்--புதிதாக அமைக்கப்பட்ட வங்கதேச பஞ்சாலைக் கார்ப்பரேஷனின் 6 நிர்வாகிகள் -- மற்றும் 5 பஞ்சாலைகளின் நிர்வாகிகள் சஸ்பெண்டு ஆனவர்களில் முக்கியமானவர்கள்.

கடமை தவறியது -- விதிகளைமீறி நடந்துகொண்டது -- பொதுப் பணத்தை வீணாக்கியதுபோன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வங்க தேச அங்கீகாரம்

பலுச்சிஸ்தான் கவர்னரும் குரல் கொடுக்கிறார்

கராச்சி, செப். 28—

"பாகிஸ்தான் உடனடியாக வங்க தேசத்தை அங்கீகரிக்க வேண்டும்; இந்நிலை ஏற்படாத வரையில், இந்தியத் துணைக்கண்டத்தில் அமைதி நிலவ முடியாது"

என்று பலுசிஸ்தான் கவர்னர் பிஜன் ஜோ, தேசிய மக்கள் கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக் காட்டி வலியுறுத்தினார்.

மாராட்டிரத்தில் மின்வெட்டு

பம்பாய், செப். 29—

"மாராட்டிர மாநிலம் முழுவதிலும் அக்டோபர் 6-ந் தேதி முதல் 2 சதவிகிதம் முதல் 8 சதவிகிதம் வரையில் மின்சார வெட்டு நடைமுறைக்கு வரும்"

என்று முதலைச்சர் வி. பி. நாயக் அறிவித்திருக்கிறார்.

"தொழில் துறை -- தொழிலாளர் மற்றும் தொடர்புள்ள அதிகாரிகளைக் கலந்தாலோசித்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது" என்று அவர் தெரிவித்தார்.

நவம்பர் இறுதியில் அல்லது டிசம்பர் தொடக்கத்தில் மின்சாரம் வழங்கும் நிலைமையை மாநில அரசு பரிசீலனை செய்யும்.

பாகிஸ்தானில் மீண்டும் நில நடுக்கம்

இராவல்பிண்டி, செப். 29—

அபட்டாபாத்தில் இரண்டாம் நாளாக கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டது; இதனால் பழைய வீடுகளில் விரிசல் ஏற்பட்டதைத் தவிர, உயிர்ச்சேதம் பற்றித் தகவல் இல்லை.

அஜாரிபாக் மாவட்டத்திலுள்ள அரிபூர் நகரிலுவ் கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டது; இதில் மூவர் சொற்ப காயமடைந்தனர்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 2003 புரட்டாசி 13 (29—9—72) வெள்ளி

ஆந்திர முதல்வரின் கட்சி விசுவாசம்

ஆந்திர மாநிலத்தின் முதல்வராக – சந்தர்ப்பவசத்தால் பதவி பெற்ற நரசிம்ம ராவ், 'பதவி கிடைத்ததே போதும்' என்ற திருப்தியுடன் சொந்தக் கட்சிக்குப் 'பரம விசுவாசி'யாக நடந்து கொள்ள முனைந்திருக்கிறார்.

மாநிலத்தின் நலன் குறித்தோ – மாநில மக்களின் எதிர்கால நல்வாழ்வு குறித்தோ தமக்கு அக்கறை இல்லையென்பதையும் அவர் வெளிப்படையாகவே காட்டிக்கொண்டுவிட்டார்.

தனக்குப் பிடிக்காத பிரம்மானந்த ரெட்டியைச் சீட்டுக் கிழித்து வீட்டுக்கு அனுப்ப இந்திரா காந்தி முனைந்தபோது, முதலமைச்சராக 'ஞானஸ்நானம்' பெற்றவர்தான் இந்த நரசிம்மராவ்; இவருக்குச் சீட்டுக் கிழியப்போவது எப்போது என்பது இந்திரா காந்திக்குத்தான் தெரியும்!

தமது பதவிக்குப் பாதுகாப்பாக என்னென்ன செய்து கொள்ள வேண்டும் என்பதிலேயே அக்கறை செலுத்திக் கொண்டிருக்கும் நரசிம்ம ராவுக்கு, மாநிலத்தின் எதிர்காலம் எக்கேடுகெட்டுப் போனால்தான் என்ன?

இந்திரா காந்தியின் 'கடாட்சம்' ஒன்று மட்டும் நின்று நிலைத்தால்போதும் என்பதுதான் அவருடைய இன்றைய ஜென்ம சாபல்ய'மாக இருந்துவருகிறது!

அண்மையில் சென்னைக்கு வந்திருந்த திரு. நரசிம்ம ராவின் வாயை சென்னைச் செய்தியாளர்கள் கிளறியிருக்கின்றனர்; உடனே தமது உள்ளக்கிடக்கையை, உள்ளது உள்ளவாறு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

மாநில சுயாட்சிப் பற்றிக் கருத்துக் கேட்ட செய்தியாளர்களிடம், 'போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்ற போக்கில் அவர் கருத்தறிவித்துள்ளார்; 'ஆந்திரத்தைப் பொறுத்த வரையில், எங்களுக்கு இருக்கின்ற அதிகாரமே போதும் -- புதிதாக ஒன்றும் தேவையில்லை' என்று அவர் கூறியிருக்கிறார். அவரிடம் இதைத் தவிர, வேறு எதனைத்தான் எதிர்பார்க்கமுடியும்?

இதுதான் பிரம்மானந்த ரெட்டிக்கும் -- இவருக்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

பிரம்மானந்த ரெட்டி, 'மாநிலத்துக்கு இருக்கின்ற அதிகாரம் போதாது' என்று வெளிப்படையாகவே கூறியவர்; அவர் இருந்த அதே இடத்தில் இன்று இருக்கும் நரசிம்ம ராவ், 'இருக்கின்ற அதிகாரமே போதும்' என்கிறார்!

உண்மை பேசியவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டார்! உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர் பதவியைச் சுகிக்கிறார்!

பதவிச் சுகம் நீடித்திருக்க வேண்டுமென்றால், 'நரசிம்ம ராவ் பாணி'யில்தான் மற்ற மாநில முதலமைச்சர்களும் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஓர் எடுத்துக் காட்டாகும்!

நரசிம்ம ராவ் இப்படிச் சொல்லிவிட்டதாலேயே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் இருக்கிறது என்றோ – கூடுதல் அதிகாரம் கேட்பது தேவையற்ற ஒன்று என்றோ எவரும் கொள்ள மாட்டார்!

பதவிக்கு வந்ததாலேயே நாட்டுக்கு அறிமுகமானவர் நரசிம்ம ராவ்; பதவியில் இல்லாமலே நாடறிந்த தலைவர்களாக உள்ள ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்றவர்கள், 'மாநில சுயாட்சி தேவை' என்று குரல் கொடுத்து வருவதில் உண்மை இல்லையென்று நரசிம்ம ராவாலேயே மறுக்கமுடியாது.

செய்தியாளர்கள் மாநில சுயாட்சி பற்றிக் கேட்டதும், அண்மையில் இந்திரா காந்தி அம்மையார், 'எனக்கு இருக்கும் அதிகாரத்தைவிட மாநில முதல்வர்களுக்கு அதிக அதிகாரங்கள் உள்ளன' என்று கூறியது, நரசிம்ம ராவின் நினைவுக்கு வந்திருக்கிறது; உடனே, ஒரு போடு போட்டுவிட்டார் -- 'இருக்கின்ற அதிகாரம் போதும்' என்று! தம் கட்சித் தலைவியார் கிழித்த கோட்டை அவர் தாண்ட முடியுமா என்ன?

ஒருவேளை, இந்திரா கட்சி ஆளும் மாநிலங்களில், முதல்வர்களுக்கு மட்டும் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதோ என்னவோ -- நரசிம்ம ராவுக்குத்தான் வெளிச்சம்!

இந்திரா கட்சி முதலமைச்சர்கள், கூடுதல் அதிகாரம் கேட்க வாய் திறக்கமுடியாது என்ற உண்மையை ஒப்புக்கொள்கிறோம்; ஆனால், மாற்றுக் கட்சி ஆளுகின்ற தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் நிலை என்ன?

இந்திரா காந்தி என்ன -- இவருடைய தந்தையார் ஆண்ட போதே, 'மாநிலத்துக்கு உள்ள அதிகாரம் போதாது -- கூடுதலான அதிகாரம் வேண்டும்' என்று மேற்கு வங்க முதல்வராக இருந்த பி. சி. ராய் போன்றவர்கள் துணிந்து குரலெழுப்பவில்லையா? அவரும் நேருவின் தலைமையில் இருந்த காங்கிரசுக் கட்சியில்தானே இருந்தார்?

'பி. சி. ராயுடன் நரசிம்ம ராவை ஒப்பிட முடியுமா?' என்று கேட்கக்கூடும் -- முடியாதுதான்! நேரு காலத்துக் காங்கிரசு வேறு -- இந்திரா உருவாக்கியுள்ள காங்கிரசு வேறுதான்! பி. சி. ராய் போன்ற துணிவுள்ளவர்களுக்கு இந்திரா கட்சியில் ஏது இடம்? நரசிம்ம ராவ்களால் நிரப்பப்பட்டுள்ள கட்சியில், பி. சி. ராய்கள் இடம்பெறுவது என்பது எண்ணிப்பார்க்கவும் முடியாத ஒன்றுதான்!

எனவே, ஆந்திர முதல்வரின் கூற்றை நாம் பொருட்படுத்தவோ -- ஆராயவோ தேவையில்லை; அதன் பலனை ஆந்திர மக்கள் அனுபவித்துக் கொள்ளட்டும்!

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், 'மத்தியில் கூட்டாட்சி -- மாநிலத்தில் சுயாட்சி' என்ற இலட்சியத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் பின்வாங்கப் போவதில்லை!

இந்த இலட்சியத்தை அடைய, 'அண்ணா வழியில் பாடுபடும் கலைஞரின் தலைமையில் அயராது உழைப்போம்' என்ற சூளுரை ஏற்கத் தமிழக மக்கள் அனைவரையும் அழைக்கிறோம்!

மீனம்பாக்கம் விமான நிலைய மேம்பாட்டுக்கு ரூ. 14 கோடி

மாமல்லபுரம் -- அனைத்து நாட்டுச் சுற்றுலா இடமாக உருவெடுக்கும்

மத்திய அமைச்சர் கரன் சிங் தகவல் -- தமிழக அமைச்சர் க. இராசாராமுடன் ஆலோசனை

சென்னை, செப். 29—

"சென்னை விமான நிலையம் ரூ. 14 கோடி செலவில் விரிவுபடுத்தப்படும்; 5-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இது நிறைவேற்றப்படும்; இதனால், பல்வேறு வெளிநாட்டு விமானங்களும் சென்னைக்கு வந்து செல்லக்கூடும்; சுற்றுலா வளர்ச்சியும் பெரும் அளவில் ஏற்படும்"

என்ற தகவலை மத்திய சிவில் விமானப் போக்குவரத்துச் சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் கரன் சிங் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

சேலம் விமான நிலையம்

சேலத்தில் விமான நிலையம் அமைப்பது குறித்து ஆய்வு நடந்து கொண்டு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மாமல்லபுரம், கோவளம் (கேரளம்), கோவா கடற்கரைகளை ஐ.நா. திட்டத் தூதுக் குழுவினர் நவம்பர் மாதத்தில் பார்வையிட்டு ஆய்வு நடத்துவர்.

மாமல்லபுரத்தில் 20 சுற்றுலாக் குடில்கள் கட்டப்பட்டு வருகின்றன; விரைவில் மாமல்லபுரம் ஒரு முக்கியமான சர்வதேச சுற்றுலா இடமாகிவிடும்.

இராமேசுவரத்தில் பயணிகட்கு தற்போதுள்ள வசதிகள் திருப்தி தருவதாக இல்லை; 4-வது திட்டத்தின்கீழ் அங்கு ரூ. 6 இலட்சம் செலவில் ஒரு சுற்றுலா மாளிகையைத் தமிழ்நாடு அரசு அமைக்கும்.

நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் சென்னையில் ரூ. 3.50 இலட்சம் செலவில் ஓர் இளைஞர் விடுதி கட்டப்படும்; பாண்டிச்சேரியிலும் இது போன்ற ஒரு விடுதி அமைக்கப்படும்.

சுற்றுலாத்துறை மூலமாகத் தற்போது மத்திய அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 40 கோடி வருமானம் கிடைக்கிறது; 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது இந்த வருமானம் ரூ. 100 கோடியாக உயரும்.

சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாடு சுற்றுலா அமைச்சர் க. இராசாராம், கரன் சிங்கைச் சந்தித்துப் பேசினர்; கோடிக்கரையிலும், மற்றும் முக்கிய இடங்களிலும் சுற்றுலா வளர்ச்சி குறித்து அவர்கள் விவாதித்தனர்.

ஐந்தாவதுதிட்ட மதிப்பீடு ரூ. 51,000 கோடி

அந்நியச் செலாவணித் தேவையே பெரும் பிரச்சினை

மத்திய--மாநில அரசுகள் ரூ. 6,000 கோடி கூடுதலாகத் திரட்ட வேண்டுமாம்

புதுடில்லி, செப். 28—

5-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1974—79) தற்காலிகமான விவரங்கள் இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன; இதன் மொத்த முதலீடு ரூ. 51,000 கோடியாக இருக்கும்; அதில் அரசுத் துறையின் பங்கு சுமார் ரூ. 35,000 கோடி.

இந்த முதலீட்டின் காரணமாக ஐந்தாவது திட்ட காலத்தில் மொத்த வளர்ச்சி ஆண்டுக்கு 5.50 சதவிகிதமாகவும், வேளாண்மை வளர்ச்சி 4.50 சதவிகிதமாகவும், தொழில் வளர்ச்சி 8 சதவிகிதம் முதல் 9 சதவிகிதமாகவும் இருக்கும்; ஏற்றுமதி வளர்ச்சி 7 சதவிகிதமாக இருக்கும்.

இந்தத் திட்டத்தில் வரி விதிப்பு 1972—73-ம் ஆண்டு அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. விலைவாசிகள் 1971—72 நிலவர அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றன.

ஐந்தாவது திட்டத்தின்போது வெளிநாட்டு ஏற்றுமதி--இறக்குமதியில் ரூ. 4,000 கோடி பற்றாக்குறை ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது; ஆகவே, செலாவணி நிலுவையை எவ்வாறு சரிக்கட்டுவது என்பது திட்டத்தைத் தயாரிப்பவர்களுக்கு ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது; ஏனெனில், தன் பலம் கொண்டு நிற்பதாக நாட்டை ஆக்க வேண்டும் என்பது நோக்கம்; ஆகவே தீவிரமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படலாம் என்று கருதப்படுகிறது.

மத்திய அரசும் -- மாநில அரசுகளும், கூடுதலாக ரூ 6,000 கோடி திரட்டும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; 4-வது திட்டத்தில் இது ரூ. 4,000 கோடியாகும்.

உண்மையான வருமான உயர்வின் அளவுக்குமேல் -- அதாவது 5.50 சதவிகிதத்துக்குமேல் பற்றாக்குறை வரவு -- செலவு (புதிய நோட்டு அடிப்பது போன்றவை) இருக்கக் கூடாது என்று கருதப்படுகிறது.

1973 அக்டோபர் வாக்கில் 6-வது நிதிக் குழு தனது அறிக்கையை அளித்த பின்னர்தான் மாநிலங்களின் திட்ட மதிப்பீடுகள் இறுதியாக முடிவு செய்யப்படும்.

தோட்டத் தொழிலாளருக்கு வீடு

மத்திய அரசின் மானியத்துடன் நிறைவேற்றப்படும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிலும் அசாமிலும் மலைத் தோட்டத் தொழிலாளருக்கு மேலும் வீடுகள் கட்டித்தர மத்திய பொதும் பணித் துறை எண்ணியிருக்கிறது.

மத்திய பொதுப் பணித் துறை அசாமுக்கு ரூ 21.43 இலட்சமும், தமிழ்நாட்டுக்கு ரூ. 78,000-மும் கடன் அனுமதித்துள்ளது.

இது தவிர, இத்திட்டத்தின்கீழ் அசாமுக்கு ரூ. 16 இலட்சம் -- தமிழ்நாட்டுக்கு ரூ. 96,000 உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதி அளிக்கும் திட்டத்தின்கீழ் மத்திய அரசு தொழிலாளருக்கு வாடகை இல்லாமல் வீட்டு வசதி செய்து கொடுப்பதற்காக 50 சதவிகிதம் வரை கடனும், 37.5 சதவிகிதம்வரை மானியமும் தோட்ட அதிபர்களுக்கு அளிக்கும்.

உலக பாங்கி வழங்கும் கடன்

இரு ஒப்பந்தங்கள் கையெழுத்து

வாஷிங்டன், செப். 28—

உலக வங்கியும் -- அதன் துணை நிறுவனமான சர்வதேச வளர்ச்சிச் சங்கமும் இந்தியாவுக்கு சுமார் ரூ 118 கோடி (15.8 கோடி டாலர்) வழங்க இரு கடன்ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன; இந்தியாவில் தொழில் துறை, கப்பல் வசதி வளர்ச்சிக்கு அவை உதவும்

"உர உற்பத்திக்கும், விவசாயம் -- மின்சார விசை -- போக்குவரத்து வளர்ச்சிக்கு இயந்திரங்களைத் தயாரிக்கவும் ரூ 56 கோடி கடன் உதவும்.

மூலப் பொருட்கள் -- இயந்திரப் பாகங்கள் -- உதிரிப் பாகங்கள் 1972—78-ல் இறக்குமதி செய்வதற்குத் தேவையான அந்நியச் செலாவணியில் அது 25 சதவிகிதத்தை நிறைவு செய்யும்" என உலக வங்கி மதிப்பிடுகிறது.

6 எண்ணெய்க் கப்பல்களை வாங்க மற்றொரு கடனை ரூ. 62 கோடி உதவும்.

ஆசியாவிலேயே சிறந்த சுழலும் ஓட்டல்

சென்னையில் அமைக்கப்படும்

மாவட்டத்துக்கு ஓர் அடையாளச் சின்னம் -- அமைச்சர் க. இராசாராம் தகவல்

சேலம், செப். 29—

சேலம் அஸ்தம்பட்டியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சுற்றுலா விடுதித் திறப்பு விழா நடந்தது; விழாவுக்குச் சுற்றுலாத் துறை அமைச்சர் இராசாராம் தலைமைதாங்கினார்; அப்போது அமைச்சர் க. இராசாராம் பேசுகையில் கூறியதாவது:—

"சுற்றுலாத் துறை வளர்ச்சியில் முதலமைச்சர் கலைஞர் தீவிரக் கவனம் செலுத்திவருகிறார்; சுற்றுலாத் துறைமூலம் நல்ல வருமானம் கிடைக்கிறது.

கிருஷ்ணகிரி அணைக்கு அருகில் உள்ள பூங்காவை மைசூர் பிருந்தாவனத்தைவிட அழகுபடுத்தத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

குற்றாலத்திலும் இதுபோன்ற சுற்றுலா விடுதி அமைக்கும் வேலை நடந்துவருகின்றன.

சுற்றுலா வாரியம் மூலம் இது போன்ற பணிகள் நடந்து வருகின்றன; அந்நியச் செலாவணியும் சுற்றுலாத் துறை மூலம் நமக்கு நிறைய கிடைக்கிறது.

சென்னை — சைனா பஜாரில் மாபெரும்சுழலும் ஓட்டல்அமைக்கப்படும்; ஆசியாக் கண்டத்திலேயே இல்லாத அளவுக்கு இந்த ஓட்டலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் படகுகள்

சென்னையில் உள்ள கூவம் ஆற்றில் 'பிளாஸ்டிக்' படகுகள்விடத் திட்டமிடப்பட்டிருக்கிறோம்; ஏறத்தாழ 100 படகுகள் விடப்படும்.

இப்போது கோடைக்கானலில் மரத்தினாலான படகுகளும், ஒகனேக்கல்லில் பரிசலால் செய்யப்பட்ட படகுகளும்தான் விடப்பட்டுள்ளன.

அடையாளச் சின்னங்கள்

வெளிநாடுகளில் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தனிச் சின்னம் உள்ளது; வெளிநாடுகட்குச் செல்பவர்கள் அந்தச் சின்னத்திலான பொம்மைகளை வாங்கிவருகிறார்கள்; தமிழகத்திலும் அதுபோல ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஓர் அடையாளச் சின்னம் அமைக்க ஆலோசித்து வருகிறோம்.

மதுரைக்குக் கண்ணகி சின்னமும், தஞ்சைக்கு இராஜராஜ சோழன் சின்னமும், தர்மபுரிக்கு ஔவை சின்னமும் மற்றும் இது போன்ற சின்னங்களும் அமைக்கப்படும்.

சுற்றுலாத் துறைமூலம் கைத்தொழில் நிபுணர்கட்கும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

அமெரிக்க இராணுவ உதவி

இந்தியாவுக்கு இல்லையாம்

வாஷிங்டன், செப். 28—

52 நாடுகளுக்கு இராணுவ உதவியளிக்க செனட்டிடம் அமெரிக்க நிர்வாகம் கோரியது; ஆனால், பாகிஸ்தான்--- இந்தியா -இலங்கை--நேபாளத்துக்கான உதவியை செனட்டில் கொண்டுவரப்பட்ட இராணுவ உதவி மசோதா தடை செய்திருக்கிறது.

'தென் ஆசிய நாடுகளின் இராணுவ விவகாரங்களில் அமெரிக்க அரசு மேலும் சிக்கிக்கொள்ளாமல் இருக்க இந்தத் திருத்தம் சேர்க்கப்பட்டது" என்று அந்நிய உறவுக் குழு கூறியது; செனட் சபையில் அது எதிர்க்கப்படவில்லை.

வங்காள தேசத்துக்கு உதவ 10 கோடி டாலரையும், பிலிப்பைன்ஸ் வெள்ள நிவாரணத்துக்கு 5 கோடி டாலரையும் செனட் மசோதா ஒதுக்கியது.

கிழக்குக் கடற்கரைச் சாலை

ரூ. 2.65 கோடி செலவில் புதிய பாலங்கள்

மதுராந்தகம், செப். 29—

சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குக் குறுக்கு வழியாகச் செல்லும் 'காசிப்பாட்டை' எனப்படும் கிழக்குக் கடற்கரைச் சாலையில் 40 பாலங்கள் ரூ. 2,65,50,000 செலவில் கட்டப்படும்.

இந்தத் திட்டத்தின் சார்பில், ரூ. 2,02,00,000 செலவில் பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

தற்போது வயலூர் அருகே ரூ. 34 இலட்சம் செலவில் ஒரு பாலமும், செங்கற்பட்டு மாவட்டத்தையும் -- தென் ஆற்காடு மாவட்டத்தையும் இணைக்கும் தென்பாக்கம் — மரக்காணம் பாலம் ரூ. 28 இலட்சம் செலவிலும் கட்டப்படவிருக்கிறது.

வன்முறை--ஆர்ப்பாட்டங்களால் விலை குறைந்துவிடாது

கிளர்ச்சியைத் தூண்டிவிடுவோருக்கு இந்திரா காந்தி எச்சரிக்கை

சஜான் பூந்திரா, செப். 28—

"தற்போது விலைகள் உயர்ந்திருப்பது உண்மைதான்; ஆனால், இதற்காக ஆர்ப்பாட்டம் நடத்துவதன் மூலம் விலைகளைக் குறைத்துவிட முடியுமா? ஆர்ப்பாட்டம் செய்து நேரத்தையும் -- சக்தியையும் வீணாக்குவதை விடுத்து, உறுதியான நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும்; விலைகளைக் குறைக்க இது ஒன்றே வழியாகும்.

'பஸ்களை எரிப்பது -- பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பது போன்ற வன்முறைச் சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன; இது கண்டிக்கத்தக்கதாகும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, இமாசலப் பிரதேசத்தில் கூறியிருக்கிறார்; 'இதுபோன்ற சக்திகளைச் சில எதிர்க் கட்சிகள் தூண்டிவிடுகின்றன' என்றும் அவர் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"நான் பதவிக்கு வந்ததுமுதல், வறட்சி -- வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றங்களையும், வங்காள தேச அகதிகள் பிரச்சினையையும் -- பாகிஸ்தானுடன் ஏற்பட்ட போரையும் -- இன்னும் இதுபோன்ற மற்றும் பல பிரச்சினைகளையும் தொடர்ந்து சமாளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது; இதனால் நாட்டில் பொருளாதார நெருக்கடி தோன்றியிருக்கிறது.

சோசலிசம் ஏற்படுத்தவிடாமல், சில பிற்போக்குச் சக்திகள் நடுவழியில் தடங்கல்களாக இருக்கின்றன; ஆயினும், அரசாங்கம் எடுத்துள்ள சோசலிச நடவடிக்கைகளை எதிர்க்கும் ஆற்றல் அவர்களுக்கு இல்லை.

எப்படியும் வறுமையை ஒழிக்க நான் உறுதிகொண்டிருக்கிறேன்; ஆகவே, மக்கள் பொறுமையுடன் இருக்கவேண்டும்.

வறுமையை ஒழிப்பதும் -- சோசலிச சமுதாயம் அமைப்பதும் விலை கொடுத்து வாங்கும் பொருள் அல்ல என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்."

தமிழ்நாட்டுக்குப் புதிய கல்வித்திட்டம்

12 ஆண்டில் ரூ. 375 கோடி செலவிடப்படும்

பரீட்சை முறைகளில் மாறுதல்-- கல்வியாண்டும் மாறும்

சென்னை, செப். 29—

கல்வி வசதியை வேலைவாய்ப்புடன் நேரடியாகத் தொடர்புபடுத்து வதை நோக்கமாகக் கொண்ட தீவிரக் கல்விச் சீர்திருத்தங்களை, மாநிலத் திட்டக் குழுவில் பணிக் குழு' பரிந்துரைத்திருக்கிறது.

டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா தலைமையில் அமைக்கப்பட்ட இந்தப் பணிக் குழு அளித்துள்ள அறிக்கையில் இப்பரிந்துரைகள் அடங்கியுள்ளன.

"இப்போதுள்ள கல்வி முறையை அடியோடு மாற்றியமைத்தாக வேண்டும்; ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் படிப்பைவிட்டுவிட்டு மீண்டும் மேற்கொண்டு படிப்பைத் தொடருவதற்கு ஏற்றதாகப் புதிய கல்வி முறை இருக்க வேண்டும்" என்றும் அது கூறுகிறது.

தற்போது பள்ளி அளவில் 3 கட்டங்கள் உள்ளன; 1-வது முதல் 5-வது வகுப்புவரை ஒரு கட்டம்; அடுத்தது 6-வது முதல் 8-வது வரை ஒரு கட்டம்; பின்னர் 9-வது முதல் 11-வது வரை ஒரு கட்டம்; கல்லூரியில் ஓர் ஆண்டு புகுமுக வகுப்பு (பி.யு.சி); 3 ஆண்டு பட்டப் படிப்பு; அதற்கு மேல் 2 ஆண்டு மேல் பட்டப் படிப்பு -- என்று 3 கட்டங்கள் உள்ளன.

இந்த ஏற்பாடு மாணவர்களின் தேவையையோ அல்லது சமூகத்தின் தொழில் திறன் தேவையையோ நிறைவு செய்வதாக இல்லை; பலர், படிப்பை இடையிலேயே அரைகுறையாக நிறுத்தி விடுகிறார்கள்.

இதற்குப் பதிலாக, பணிக் குழு பின்வரும் ஏற்பாட்டைப் பரிந்துரைத்திருக்கிறது:—

"பள்ளிப்படிப்பு 10 ஆண்டுக் காலம் கொண்டதாக இருக்க வேண்டும்; தற்போதுள்ளபாடத் திட்டத்தை அதற்குள்ளேயே நிறைவுசெய்துவிடுவதற்கு ஏற்ற வகையில், பள்ளிவேலை நாட்களை மாற்றியமைக்கவேண்டும்; இதை 4 அல்லது 5 கட்டங்களாகப் பாகுபாடு செய்து -- மாணவர்கள் எந்தக் கட்டத்தில் வேண்டுமானாலும் படிப்பை நிறுத்திக்கொண்டு மறுபடியும் அதிக சிரமமின்றி படிப்பைத் தொடரக்கூடிய வகையில் மாற்றியமைக்கவேண்டும்.

4-வது வகுப்புக்கு முன்பே படிப்பைநிறுத்திக் கொள்பவர்களுக்கும் பள்ளிகளுக்கு வெளியே படிப்பைத் தொடர வசதிசெய்து தரவேண்டும்.

பள்ளிகளில் படிப்பவர்களுக்கும் -- பள்ளிக்கு வெளியே படிப்பவர்களுக்கும் ஒரே மாதிரியான பயிற்சி இருக்கும்பொருட்டுப் பொதுப் பாடத் திட்டத்துக்கும் -- மாலை வகுப்புகளுக்கும், அஞ்சல் மூலம் கல்விக்கும், வானொலி -- டெலிவிஷன் மூலம் கல்விக்கும் வழி செய்து தரவேண்டும்; கல்வியறிவு அற்ற முதியோர் சுமார் 143 இலட்சம் பேர் உள்ளனர்' அவர்களும் இதைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறையில் இருக்க வேண்டும்.

உயர்நிலைக் கல்வி

உயர்நிலைக் கல்வி தொழில் முகமானதாகவும் -- வேலைவாய்ப்பை நோக்கமாகவும் கொண்டிருக்க வேண்டும்.

8-வது படித்தவர்கள் அதற்கு மேல் கல்வியில் தனிக் கவனம் செலுத்தும் பள்ளிகளிலும் சேர்ந்து படிக்க வசதி இருக்க வேண்டும்.

மாணவர்கள், வயல்களிலோ -- தொழிற்சாலைகளிலோ -- அலுவலகங்களிலோ வேலை செய்துவிட்டு வந்து தொடர்ச்சியாகப் பள்ளிகளில் படிக்க வசதி இருக்கவேண்டும்.

மாணவர்களின் தகுதி

பள்ளிப்படிப்பு 10 ஆண்டுகளில் முடிவதாக இருக்கவேண்டும்; அதுவரையில், பள்ளிகளுக்குள்ளேயே மாணவர்களின் தகுதி மதிப்பிடப்படவேண்டும்; 10 வது ஆண்டு முடிவில் பொதுப் பரீட்சை மூலமோ அல்லது அந்தந்த பள்ளிப் பரீட்சையின் மூலமோ மாணவர்களின் தகுதியை முடிவு செய்யலாம்.

கல்லூரிக் கல்வி

கல்லூரிகளில் சேர்த்துக்கொள்வதற்கு, அந்தந்தக் கல்வி நிலையங்கள் மாணவர்களின் தகுதியையும்--ஆற்றலையும் சோதித்து அறிவதற்காகப் பரீட்சை வைத்து சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இரண்டு ஆண்டு இண்டர்மீடியட் படிப்பு -- இரண்டு ஆண்டு பட்டப் படிப்பு -- என்ற அளவில் கல்லூரிப் படிப்பு இருக்க வேண்டும்; அதற்குப் பிறகு இரண்டு ஆண்டு பட்டப் பிற்காலப் படிப்பு இருக்கலாம்; அல்லது இண்டர்மீடியட்டுக்குப் பிறகு 3 ஆண்டு ஆனர்சுப் படிப்பு இருக்கலாம்.

இண்டர்மீடியட் வகுப்புடன் படிப்பு நிறைவுற வேண்டும்; பட்டப் படிப்பும் -- பட்டப் பிற்காலப் படிப்பும், தொழில்களையோ அல்லது குறிப்பிட்ட பாடங்களையோ முக்கியமாகச் சொல்லித் தருவதாக இருக்க வேண்டும்.

தொழில் பட்டப் படிப்பைப் பொறுத்த வரையில் இப்போதுள்ள கால அளவில் மாறுதல் கூடாது.

இண்டர்மீடியட் படிப்பை, 'சட்டப்பூர்வமாக அமைக்கப்படும் தன்னதிகாரமுள்ள மாநிலக் குழு' ஒன்றிடம் ஒப்படைக்க வேண்டும்; புதிதாக 2 அல்லது 3 இணைப்புப் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்த வேண்டும்.

சுய அதிகாரமுள்ள கல்லூரிகளையும்--செமிஸ்டர் முறையையும்--வகுப்புத் தேர்வு முறையையும் ஏற்படுத்த வேண்டும்.

சென்னை, அண்ணாமலை மதுரைப் பல்கலைக்கழகங்களைப் பட்டப் பிற்காலப் படிப்பு -- ஆராய்ச்சி ஆகிய துறைகளை கவனித்துக் கொள்ளும் சிறந்த நிறுவனங்களாக மேம்பாடு செய்யவேண்டும்.

தொழில் நுட்பத் துறையில், டிப்ளமா--பட்டம்--பட்டப் பிற்காலச் சான்றிதழ்கள் தருவதற்குத் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் இருக்க வேண்டும்.

பத்தாவதுவரை இலவசக் கல்வி ஏற்பாடு இருக்க வேண்டும்; பள்ளிக் கல்வியாக இருந்தாலும் சரி -- பள்ளிக்கு வெளியே அளிக்கப்படும் கல்வியாக இருந்தாலும் சரி -- இலவசமாக இருக்க வேண்டும்.

கல்லூரி படிப்பைப் பொருத்த வரையில், பழையபடி சம்பளம் கட்டிப் படிக்கும் முறையைப் படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்; அத்துடன், தகுதியை அடிப்படையாகக் கொண்டும் -- வருமானத்தை அடிப்படையாகக் கொண்டும் 'ஸ்காலர் ஷிப்' தரும் ஏற்பாடும் இருக்க வேண்டும்."

துணைத் தலைவர் விளக்கம்

தமிழகத் திட்டக் குழுவின் கல்வி —விஞ்ஞானத் தொழில் நுட்ப ஆய்வுக் குழு, தனது அறிக்கையைத் திட்டக் குழுத் தலைவரான முதலமைச்சர் கலைஞரிடம் தாக்கல் செய்தது.

அறிக்கையின் விவரங்களைச் செய்தியாளர்களிடம் திட்டக் குழு துணைத் தலைவர் எம். ஜி. இராசாராம் விளக்கினார்; குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாட்டில் கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும்; வேலைவாய்ப்புக்கு ஏற்றவகையில் கல்வி பயிற்சி அமைய வேண்டும்; இதற்காக ரூ. 375 கோடி மதிப்பான 12 ஆண்டுத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் இப்போது 11 ஆண்டு படிப்பு (11-வது வகுப்பு) இருக்கிறது; இதை மாற்றி 10 ஆண்டாகக் குறைக்க வேண்டும்.

முதல் வகுப்பிலிருந்தே வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்டு கல்வித்தரம் கொடுக்கப்படும்.

கல்லூரிகளில் தற்போது பி.யு.சி. வகுப்பில் ஓராண்டு படிக்க வேண்டியுள்ளது; இந்த முறை ஒழிக்கப்படும்; இதற்குப் பதிலாக தொழில் நுட்பக் கல்வியுடன் இளநிலைப் பட்டப் படிப்பு முறை புகுத்தப்படும்; இந்த வகுப்பில் 2 ஆண்டுகள் படிக்க வேண்டும்.

அதன் பிறகு 9-ஆண்டுக்காலம் பட்டப் படிப்பு படிக்கவேண்டும்; இதற்குப் பிறகு மாநில கல்விக் கவுன்சில் பொதுத் தேர்வு நடத்தப்படும்; அதில் தேறுவோர்களுக்குத்தான் பட்டம் வழங்கப்படும்.

இப்போது ஜூன் முதல் மார்ச் முடிய 'கல்வி ஆண்டு' என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; இது மாற்றியமைக்கப்படும்; இப்போதைய பரீட்சை முறையும் மாற்றியமைக்கப்படும்."

தமிழ்நாடு ஆசிரியர் முன்னணி

மன்னார்குடி, செப். 27—

ஒருசில அரசியல் கட்சிகளின் கைப்பாவையாகச் செயல்பட்ட ஆசிரியர்களின் ... ஆதரவு பெற ... 'தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி'யின் போக்கு பிடிக்காமல் ... தஞ்சை -- திருச்சி -- ... தருமபுரி ஆகிய மாவட்ட உறுப்பினர்களின் ... முன்னேற்றக் கூட்டணி -- ஆசிரியர் அணி -- ஆசிரியர் ஒன்றியக் கூட்டமைப்பு -- ஆசிரியர் முன்னேற்றக் கழகம் -- ... 500 பிரதிநிதிகளுக்கு மேற்பட்டோர், தஞ்சை மாவட்டம், மன்னார்குடி ... பள்ளியில் கூடி, 'தமிழ்நாடு ஆசிரியர் முன்னணி' என்ற புதிய அமைப்பை உருவாக்கினர்.

ஆசிரியர் முன்னணியின் மாநிலத் தலைவராக சி. சுப்பிரமணியம் (திருச்சி)—பொதுச்செயலாளராக ச. மீனாட்சிசுந்தரம் (தஞ்சை)—பொருளாளராக சி. கணேசன் (தெ. ஆ.)—துணைத் தலைவர்களாக இரா. பத்மநாபன் (தஞ்சை), பு.க. கனகசபை (வ. ஆ.), பி.எம். சண்முகம் (தெ. ஆ.), ஆர். திருமலை (சேலம்)—துணைச் செயலாளர்களாக எம். வெங்கடேசன் (தருமபுரி) சொ. கடலைவண்ணன் (தஞ்சை) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அனைத்து மாவட்டங்களுக்கும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்தப் புதிய அணியில், தொடக்க -- நடுநிலை -- உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் அனைத்து நிலை ஆசிரியர்களும் அங்கம் வகிக்கலாம்; ... உணர்வுக்கு அப்பால் நின்று அரசு -- ஆசிரியர் ... சலுகைகளைப் பாராட்டும் ... யும் தெரிவித்தும், மேலும் பெற வேண்டியவைகளை ஆசிரியர் பணிக்குரிய பண்போடு அரசிடம் வற்புறுத்திப் பெறுவது என்றும், பொதுச் செயலாளர் ச. மீனாட்சி சுந்தரம் (திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சை மாவட்டம்) அறிவித்தார்.

கூட்டத்திற்கு கூனூர் கணேசன் தலைமையேற்றார்; இரா. ... நாயன் வரவேற்றுப் பேசினார்; டி. ஆர். சண்முகம் நன்றி கூறினார்.

இரங்கல்

சென்னை 2-வது வட்ட தி. மு. கழகப் பகுதி பிரதிநிதி ஆர். தேவராசன் ... சூரியகாந்தி இயற்கையெய்திய செய்தி ... கப்படுகிறது; ... இழந்து துன்புறும் அவரது குடும்பத்தினருக்கு ... யின் சார்பில் ... பாண்டியன் அனுதாபமும் ஆழ்ந்த இரங்கலும் தெரிவித்துக்கொள்கிறார்.

தமிழ்நாடு பரிசுச் சீட்டு

ஆறுதல் பரிசும் உண்டு

சென்னை, செப். 29—

பரிசுச் சீட்டுகள் வாங்க மக்களின் உற்சாகத்தைத் தூண்டுவதற்காகத் தமிழ்நாடு அரசு, பரிசுச் சீட்டு அமைப்பில் மாறுதல் செய்யவிருக்கின்றன.

இந்த மாறுதல் -- நவம்பர் 10-ந் தேதி குலுக்கல் நடக்கும் அக்டோபர் மாதத்துக்கான பரிசுத் திட்டத்திலிருந்து நடைமுறைக்கு வரும்.

புதிய பரிசுத் திட்டங்கள் விவரம் வருமாறு:—

ஒவ்வொரு வரிசையிலும் ஒரு முதற் பரிசு—(ரூ. 1-இலட்சம்).

2 இரண்டாவது பரிசுகள்—(தலா ரூ. 10,000).

75 மூன்றாவது பரிசுகள் -- (தலா ரூ. 1,000).

100 நான்காவது பரிசுகள்-- (தலா ரூ. 500).

500 ஐந்தாவது பரிசுகள் -- (தலா ரூ. 100).

1000 ஆறாவது பரிசுகள் -- (தலா ரூ. 50) இருக்கும்.

தவிர, முதற்பரிசு வாங்கும் எண்ணுக்கும் -- இரண்டாவது பரிசு வாங்கும் எண்ணுக்கும் முந்தியும் -- பிந்தியும் உள்ள எண்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

முதற்பரிசு சம்பந்தமான இரண்டு ஆறுதல் பரிசுகளுக்குத் தலா ரூ. 1,500 வழங்கப்படும்.

இரண்டாவது பரிசு சம்பந்தமான நான்கு ஆறுதல் பரிசுகளுக்குத் தலா ரூ. 500 வழங்கப்படும்.

நியாய விலைக் கடைகளில் லெவி சர்க்கரை

அக்டோபர் 1-ந் தேதி முதல் ரூ. 2-ஆக விற்கப்படும்

"நாடு முழுவதும் நியாய விலைக் கடைகளின் மூலம், கட்டுப்பாடு விலைகளில் விற்கப்படுகிறது.

லெவி சர்க்கரை நியாய விலைக் கடைகளின் மூலம், கட்டுப்பாடு விலைகளில் விற்கப்படுகிறது.

லெவி சர்க்கரை வர்த்தகத்தில் தனியார் மொத்த வியாபாரிகளை நீக்கிவிடுவது என்றும் மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது; அவர்களுக்குப் பதிலாக லெவி சர்க்கரை வர்த்தகத்தில் மொத்த வியாபாரத்தை உணவுக் கார்ப்பரேஷன் மேற்கொள்ளும்; மூன்று மாதங்களுக்குள் தனியார் மொத்த வியாபாரிகள் நீக்கப்பட்டுவிடுவார்கள்.

நாடு முழுவதிலும் நியாய விலைக் கடைகளில் கிலோ ரூ. 2 என்ற விலைக்குச் சர்க்கரையை விற்பதால், ஒரே சீரான விலை ஏற்படக்கூடும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது ஐல மாநிலங்களில், லெவி சர்க்கரை ரூ. 2 50 முதல் ரூ. 2-80 வரை விற்கிறது; இந்த மாநிலங்களையெல்லாம் அக். 1-ந் தேதி முதல் லெவி சர்க்கரையின் விலை ரூ. 2-ஆகக் குறைந்துவிடும்.

விழுப்புரத்தில் கண் சிகிச்சை முகாம்

விழுப்புரம், செப். 28—

முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் பெயரில் இலவசக் கண் சிகிச்சை முகாம், இங்கு அரசு ஆசிரியர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்று தொடங்கியது.

இம்முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சண்முகசுந்தரம் திறந்து வைத்தார்; திரு. சண்முகம் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்.

திரு. இராமன் எம்.எல்.ஏ. மற்றும் பலர் பேசினர்.

டாக்டர் வேங்கடவரதன் இந்த முகாமின் முக்கிய நோக்கங்களை விளக்கினார்.

இந்தக் கண் சிகிச்சை முகாம் அக்டோபர் 11-ந் தேதி வரை நடக்கும்.

நக்சல்பாரி இயக்கம் மா-சே-துங்கிற்கு அழிந்தது

தமிழக ஆளுநர் கருத்து

ஜார்ஹாபாத், செப். 28—

"வங்கதேச நெருக்கடிப் பிரச்சினையில் யாகியா கான் ஆதரித்ததன் மூலம் இந்தியாவை நகச்சல்பாரி இயக்கத்தைச் சீனக் கம்யூனிஸ்டுத் தலைவர் மா-சே-துங் கொன்றுவிட்டார்!

"நக்சல்பாரி இயக்கத்திற்குக் கொடும் ஆளவு செல்வாக்கு இந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரம் மகுடியிழான் இருந்தது; அந்தப் பகுதி முழுவதும் ஒன்றுபட்டு நெருக்கடி நிலை சமாளிப்பதில் இந்திய அரசுக்கும் பின்னல் உறுதியாக நின்றது."

என்று தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள், ஆமதாபாத் ரோட்டரிக் குழுவில் ஆற்றிய உரையின் போது குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"நம் நாட்டில் சனநாயகத்துக்கு நல்ல அடிப்படை அமைந்துவிட்டது; எனினும், சாதிப்பிரிவு -- வகுப்புவாதம் -- கம்யூனிசம் -- வட்டாரப்பிரிவு ஆகியவை இன்னமும் நீடித்து வருகிறது; அவற்றை முழுமூச்சுடன் எதிர்த்தாக வேண்டும்."

சி. பி. சிற்றரசு உடல்நலம் பாதிப்பு

மருத்துவமனையில் அனுமதி

சென்னை, செப். 29—

தமிழ்நாடு மேலவை தலைவர் சி. பி. சிற்றரசு அவர்கள் சிகிச்சைக்காக நேற்று மாலை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார்.

திடீரென நோய்வாய்ப்பட்ட அவரைச் சிறந்த சிகிச்சைக்கும் -- முழு ஓய்வுக்கும் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டும் என்று டாக்டர்கள் கருத்துத் தெரிவித்ததைத் தொடர்ந்தே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

டாக்டர் இராமச்சந்திரா -- டாக்டர் பி. இராமமூர்த்தி ஆகியோர் அவருக்குச் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கு முன்பு அவரை முதலமைச்சர் கலைஞர் -- அமைச்சர்கள் செ. மாதவன், பு. உ. சண்முகம், ஒ. பி. ஆரமன், மதுரை எஸ். முத்து ஆகியோர் திரு. சிற்றரசை அவரது இல்லத்தில் சந்தித்து உடல்நலம் பற்றி விசாரித்தனர்.

மின்சாரப் பற்றாக் குறையை சமாளிக்க ஏற்பாடு

புதுடில்லி, செப். 28—

நல்வேலு மாநிலங்களின் சேர்ந்து மின்துறை அமைச்சர் அடுத்த மாதம் மேச்சுவார்த்தை நடத்தப் போவதாக மத்திய மின்விசை-நீர்ப்பாசனத் துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் நிருபர்களிடம் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மின் விசைப் பற்றாக்குறை நிலவைச் சமாளிப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காகவே விவாதம் நடத்தப்போவதாக அவர் சொன்னார்.

வட்டார வாரியாக இந்தப் பேச்சுவார்த்தைகள் நடக்கும்; மின்விசையில் மிகவும் மற்றக் குறைவாக உள்ள மாநிலங்களுக்கு உபரியாக உள்ள மாநிலங்களிலிருந்து மின்விசை பெற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும்' என்றும் அவர் சொன்னார்.

"தற்போது நம் நாட்டில் 2 இலட்சம் கிலோவாட் மின்விசை பற்றாக் குறையாக உள்ளது; வறட்சி காரணமாக வல்வேறு முக்கிய நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்ததால், நீர் மின் விசையில் 15 இலட்சம் கிலோவாட் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது; தாராபூர் அணு மின் ஆலை முடிக்கப்பட்டதால், 5-இலட்சம் கிலோவாட் மின்சார பற்றாக் குறையாக உள்ளது; அடுத்த மழைக் காலம் வரையில் இந்தப் பற்றாக்குறை நீடிக்கக் கூடும்" என்று அவர் குறிப்பிட்டார்.

திருவனந்தபுரம்--- சென்னைக்கு இடையே விரைவுப் பேருந்து

விரைவில் திருவனந்தபுரத்துக்கும் -- சென்னைக்கும் இடையே விரைவுப் பேருந்து விடப்படும் எனத் தெரிவருகிறது.

கேரள சட்டமன்றத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எம். எஸ். கோவிந்தன் நாயர் இத்தகவலைத் தெரிவித்தார்.

கேரளத்திலிருந்து இதர மாநிலங்களுக்குப் புதிதாக 15 மார்க்கங்களில் நீண்ட தூர விரைவுப் பேருந்துகள் விடுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

பெரியாருக்குச் செப்புப் பட்டயம்

முதலமைச்சர் கலைஞர் வழங்குகிறார்

காமராசர் -- ஆச்சாரியார் ஆகியோருக்கும் வழங்கப்படுகிறது

சென்னை, செப். 28—

சென்னை — செங்கற்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 146 விடுதலைப் போராட்ட வீரர்களுக்குச் செப்புப் பட்டயம் (தாமிரப் பத்திரம்) வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செப்புப் பட்டயம் தென்னகம் சீமா, காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் நாள், சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெறும்; முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்குவார்.

விடுதலை வெள்ளி விழாவை முன்னிட்டு ஏற்கனவே டில்லியில் செப்புப் பட்டயம் பெற்றவர் காந்தி தொடர்ந்து இப்போது இவர்கள் அத்தச் சிறப்பினைப் பெறுகின்றனர்.

மத்திய அரசின் வேண்டுகோளுக்கினங்க, இப்போது மாவட்ட வாரியாக விடுதலைப் போராட்ட வீரர்கள் சிறப்பிக்கப்படுகின்றனர்.

சென்னை — செங்கற்பட்டை அடுத்த மற்ற மாவட்டங்களிலும் இதே போன்ற விழாக்கள் நடத்தப்படும்.

செப்புப் பட்டயம் பெறும் விடுதலை போராட்ட வீரர்கள் பட்டியலில் தந்தை பெரியார் -- சி. இராசகோபாலாச்சாரியார் -- காமராசர் -- ம. பொ. சிவஞானம் -- பக்தவத்சலம் போன்றவர்களும் உள்ளனர்.

நடக்க இருப்பவை

அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டங்கள்

30--9--72

மீஞ்சூர்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: என். வி. நடுக்சாமி; பேசுவோர்; திருப்பத்தூர் இராமமூர்த்தி, முனு. ஆதி எம்.எல்.ஏ., ஆறுமுகம் எம். எல்.ஏ., கண்ணன், இலக்குமணன், ஆ. கிருட்டினன், நடிகை ஹேமலதா, நடிகர்கள் ஜசரி வேலன், அங்குசாமி, இராதா மாணிக்கம் (இரவு மு. கேசவன் தலைமையில் முரசொலி நாடக மன்றத்தாரின் 'அண்ணா ஒரு காவியம்' நாடகம்; காலையில் மா. நாகலிங்கம் எம்.எல்.ஏ., தலைமையில் ஆயிரம் பேருக்கு உணவளிப்பு; மாலை 4-மணிக்கு எம். ஆர். சரவணன் தலைமையில் மாபெரும் ஊர்வலம்.)

1--10--72

தஞ்சை

இருவதாவது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு ஆபிரகாம் பண்டிதர் சாலையில்; தலைவர்: ஏ. இராசு; பேசுவோர்: எஸ். நடராசன் எம்.எல்.ஏ., எஸ். வெத்தண்ணன், கு. சுவர்ணன், டி. சி. சீனிவாசன் எம்.சி, டி. கே. கோவிந்தன் எம்.சி, டி. பி. கண்ணன் எம்.சி, சு. இறைவன், எஸ். டி. சக்கரியா எம்.சி., செ. சண்முகம். (இரவு ஏ. இன்னாசி -- தெருமாதிரி குழுவினரின் இன்னிசை).

புதுக்கோட்டை

ஏழாவது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6 30 மணிக்கு மேல் முன்டிரு தெரு இரண்டாம் தெரு சந்திப்பில்; தலைவர்: ஒலியர் இராசா; பேசுவோர்: விருதை ஜெயராசு, க. வீரையா எம்.பி., அ. தியாகராசன் எம். எல்.ஏ., மு. சுந்தரக்கண்ணு, எம். எஸ். அப்துல்மஜீது எம்.சி., பா. செழியன் எம்.சி., அ. மாணிக்கம் எம்.சி., சோம. காசி நாதன், நாத்திகராசு, கோ. சீனிவாசன், துரை, சி, ஆர். வீரையா.

திருவப்பூர்

25-வது வட்ட எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் மாலை 6 30 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: வை. சண்முகம்; பேசுவோர்: வெற்றி கொண்டான், அ. கியாகராசன் எம்.எல்.ஏ, க. வீரையா எம்.பி., வே. முகுசுரா, எஸ். எஸ். அப்துல்மஜீது எம்.சி., பா. செழியன் எம்.சி., சேலம் காசிநாதன். (மாலை 5-மணியளவில், எஸ். எம். இரத்தினம் தலைமையில் 664 குழந்தைகளுக்குச் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்படும்.)

குழுக்கூட்டம்

"விழுப்புரம் வட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம், 1—10—72 காலை 11-மணிக்கு விழுப்புரம் நகராட்சிப் பயணிகள் விடுதியில் -- கழகத் தணைப் பொதுச் செயலாளர் திரு. என். வி. நடராசன் அவர்கள் தலைமையிலும் -- மாவட்டச் செயலாளர் எம். செல்வராசு முன்னிலையிலும் நடைபெறும்" என்று செயலாளர் சோ. செயராமன் அறிவிக்கிறார்.

வாய் --- பல் மருத்துவ நூல் வெளியிட்டு விழா

ஊசல சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில், வாய்—பல் மருத்துவ நூல் வெளியீட்டு விழா 30—9—72 மாலை 4-30 மணிக்கு சென்னை மருத்துவக் கல்லூரி மாமண்டபத்தில் நடைபெறும்; டாக்டர் எம். நடராசன் தலைமையில் அமைச்சர பேராசிரியர் க. அன்பழகன் நூல் வெளியிடுவார்; திரு. வே. தில்லைநாயகம், திரு. மா. கி. தளபதி, திருமதி லலிதா காமேசுவரன் ஆகியோர் பேசுவர்.

அறநிலைய அமைச்சர்

மு. கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

செப். 30 மாலை 5 மணி: வேலூர்—நகர மன்ற வரவேற்பு; 6 30 மணி: இடையஞ்சாத்து—பொதுமக்கள் வரவேற்பு; இரவு 7-30 மணி: கண்ணமங்கலம்—பொதுகூட்டம்.

அக். 1 காலை 8 மணி: ஈரோடு—பெருமாள் கோயிலம் பள்ளிக் கட்டடத் திறப்பு; 9 மணி: எண்ண மங்கலம் தொடக்கம் பள்ளி புதிய தூண்ட கட்டடத் திறப்பு; 10 மணி: ஆலாம்பாளையம் — பொதுமக்கள் வரவேற்பு; 11 மணி: அம்மாபேட்டை — சொக்கநாதீசுவரர் திருக்கோயில் பாலாலயம்; நண்பகல் 12 மணி: குருவாரெட்டியூர்—மின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்த அவக்கவிழா; மாலை 6 மணி: கிட்டம்பட்டி—பொதுமக்கள் வரவேற்பு; இரவு 8 மணி: தவுட்டுப்பாளையம் — பேரறிஞர் அண்ணு பிறந்த நாள் விழாப் பொதுகூட்டம்.

ஓடாத நிலையில் உள்ள லாரிகள்

வரிச் சலுகை பெறப் புதிய நிபந்தனை

கோவை, செப். 27—

"லாரிகள் முழுதாகி ஓடாமல் உள்ள காலத்திற்கு வரியைக் குறைப்பதற்கு புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்தத் தமிழ் நாடு அரசு எண்ணியிருக்கிறது; விரைவில் இந்தத் திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்படும்"

என்று, போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இதெதொடர்பில் அவர் விளக்கிய தாவது :—

"லாரிகள் பழுதாகி ஓடாமல் உள்ள காலம் வரையில் லாரி அதிபர்கள் தங்கள் பெர்மிட்டையும் -- ஆர். சி. புத்தகத்தையும்-- தொடர்புள்ள இதர சான்றோடு கூடியும் வட்டப் போக்குவரத்து அதிகாரியிடம் ஒப் படைக்க வேண்டும்; அப்போது -- லாரிக ளுக்கு -- அந்தக் குறிப்பிட்ட காலத்திற்கு வரிக் குறைப்புச் சலுகை அளிக்கப்படும்.

தற்போதுள்ள முறைப்படி, லாரிகள் பழுதாகி ஓடாமல் இருந்தால், அதுபற்றி வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து -- அத்து டன் 'ஒர்க்ஷாப் சர்டிபிகேட்' டுகளையும் அளித்தால் போதுமானதாகும்; ஆனால், இந்த முறையின் கீழ் ஒழுங்கினங்கள் நடைபெற இட முண்டு; எனவே, இதற்குப் பதிலாக புதிய முறை கொண்டு வரப்படுகிறது; எனவே, இதற்குப் பதிலாக புதிய முறை கொண்டு வரப்படுகிறது; இந்தத் திட்டத்தைத் தமிழ்நாடு லாரி அதிபர்கள் சங்கம் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டிருக்கிறது."

நிர்வாகி: முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்கள் புலியகுளத்தில் உள்ள ராயல் அச்சகத்தில் கொண்டு வந்து அச்சிடப்பட்டு 'நம் நாடு' அலுவலகம் (14) பூபாலராயர் வீதி, கோவை-1 இல் இருந்து வெளியிடப்படுகிறது.